## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 97/2009

தேதி : 19.01.2024
பெயர் : ரமேஷ்
த/பெ : அக்கைய்யா
வயது : 51
ஊர் : வீரராகவபுரம்
வா.சா : 1

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

பொடமேக்கல முனுசாமி எனது தாத்தா ஆகும். அவர் எனது தாயின் தந்தை ஆகும். அவரது மனைவியின் பெயர் சாலம்மாள். 06.09.1989ம் தேதியில் சாலம்மாள் மற்றும் சிலர் சேர்ந்து இவ்வழக்கு தாவா 8 முதல் 11 மற்றும் 14 இன சொத்துக்களை கிரையப்பத்திரம் மூலமாக 1ம் பிரதிவாதியான இராதகிருஷணன் என்பவருக்கு விற்பனை செய்துள்ளார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. கிரையம் பெற்ற தேதியில் இருந்து 1ம் பிரதிவாதிதான் அந்த சொத்துக்களின் அனுபவத்தில் இருக்கின்றார் அவரதுபெயரில் சொத்துக்களுக்கு பட்டா சிட்டா அடங்கல் ஆகியவற்றை மாற்றியுள்ளார் என்றால் சரியல்ல. 2004ம் வருடம் தான் 1ம் பிரதிவாதி ராதாகிருஷ்ணன் தவறுதலாக வருவாய் ஆவணங்களை மாற்றியுள்ளார்.

18.05.2005ம் தேதியில் 3ம் பிரதிவாதி தனம்மாள் தாவா சொத்துக்களான 1 முதல் 4 மற்றும் 7 ம் இன சொத்துக்களை கிரையம் பெற்று ஆண்டு அனுபவித்து வருவாய் ஆவணங்களை அவரது பெயரில் மாற்றியுள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 22.02.1972 தேதியில் சாலம்மாள் மற்றும் அவரது மகள் சாந்தா, தனலட்சுமி,

கிருஷ்ணய்யா ஆகியோர்கள் தாவா சொத்துக்களான 8, 6,5 மற்றும் 11 இன சொத்துக்களை சரோஜம்மாள் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். சரோஜம்மாள் இறந்து விட்டார் என்றால் சரிதான். சரோஜம்மாளின் வாரிசுதாரர்கள் அந்த சொத்தினை நீலாவதி என்பவருக்கு விற்பனை செய்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

10.11.1992 ம் தேதியில் நீலாவதியின் வாரிசுதாரர்கள் பொது அதிகாரப் பத்திரத்தின் மூலம் 4 ம் பிரதிவாதியான பாஸ்கர் ரெட்டி என்பவருக்கு அந்த சொத்துக்களை செட்டில்மெண்ட் செய்து வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். ஆகையால் நான் தாவா சொத்துக்களை சாலம்மாளிடமிருந்து செட்டில்மெண்ட் எழுதி வாங்கி விட்டு தற்போது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு தாவா சொத்தின் மீது எந்த பரிகாரமும் கிடைப்பதற்கு தகுதி கிடையாது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.